23

RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.க.பாண்டீஸ்வரி, AMIE., MBA.,

ந.க.எண்:4209/2019/சிம-3 (420) நாள்:10.02.2020.

19 FEB 2020

பொருள்: நகர் ஊரமைப்பு - கட்டிடம் - சிவகங்கை மண்டலம் - புதுக்கோட்டை மாவட்டம் - இலுப்பூர் வட்டம் - அன்னவாசல் பேரூராட்சி/கிராமம் - சர்வே எண்.330/71-இல் - குடிசை மாற்று வாரிய குடியிருப்பு உபயோகக் கட்டடம் 7690.42ச.மீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 192 குடியிருப்புகள் கொண்ட கட்டுமான வரைபடத்திற்கு அனுமதி வழங்க - தொழில்நுட்ப இசைவு அளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) Executive Engineer, Tamil Nadu Slum Clearance Board, Thiruchirappalli அவர்கள் கடிதம் ந.க.எண்:824/JE(P)/2017 நாள்:23.11.2019.
2) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.இ5/12160/2019 நாள்:11.07.2019.
3) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:06.12.2019.
4) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:26294/2010/எல்ஏ2 நாள்:20.12.2010.
5) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:23152/2011/ நாள்:11.11.2011.
6) அரசாணை நிலை எண்:86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:28.03.2012.
7) நன்னிலை வரி கட்டணம், மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்:07.02.2020..

*****

**உத்தரவு:-**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், அன்னவாசல் பேரூராட்சி/கிராமம், சர்வே எண்.330/71-இல் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு உபயோகக் கட்டடம் 7690.42ச.மீ பரப்பளவு இடத்தில் 1 முதல் 8 பிளாக்குகள் வரை தரைதளம் + 2 தளங்கள் கொண்ட 192 குடியிருப்புகள் கொண்ட வரைடத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

| தளவிபரம் | உத்தேச தொகுப்பு |
|---|---|
| **Block 1-8** | **Type 01/2016** |
| தரைதளம் | 2380.08சமீ |
| முதல் தளம் | 2380.08சமீ |
| இரண்டாம் தளம் | 2380.08சமீ |
| **மொத்தம்** | **7140.24சமீ** |

பரப்பளவு கொண்ட குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 4-ல் கண்ட அதிகார பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனையிடத்திற்கு A முதல் G என எல்லையிடப்பட்டு மனையிட ஒப்புதலுடன் மற்றும் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ./ந.ஊ.து.இ.(சிம) எண்:06/2020** என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

S. [signature]

**EXECUTIVE ENGINEER**
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors' and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும்.

**நிபந்தனைகள்:**

1) உத்தேச கூடுதல் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்: 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசுதடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

**EXECUTIVE ENGINEER**
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண்: 341/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்: 3.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக/ STP Design-ற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியசட்டம் 1974 பிரிவு 25 (Water Act)ன் படிமேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரர் நன்னிலைவரி கட்டணம் **ரூ.19500/–(ரூபாய் பத்தொன்பதாயிரத்து ஐநூறு மட்டும்) Scrutiny Fee ரூ.29500/– (ரூபாய் இருபத்தொன்பதாயிரத்து ஐநூறு மட்டும்)** மாநில பாரத வங்கியில் செலுத்தி செலுத்துச்சீட்டின் அசல் மற்றும் நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**செயல் அலுவலர், அன்னவாசல் பேரூராட்சி புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு **செயல் அலுவலர், அன்னவாசல் பேரூராட்சி புதுக்கோட்டை மாவட்டம்** அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு **செயல் அலுவலர், அன்னவாசல் பேரூராட்சி புதுக்கோட்டை மாவட்டம** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10/02/20

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

**இணைப்பு:**
உத்தரவு மற்றும் இருதொகுப்பு வரைபடங்கள் மற்றும் படிவம்.

**பெறுநர்:**
செயல் அலுவலர்,
அன்னவாசல் பேரூராட்சி
புதுக்கோட்டை மாவட்டம்.

**நகல்:**
1. செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி கோட்டம்,
மதுரை ரோடு,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 8.

2. தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

S. [signature]
EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

29

## புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் முதல்நிலை பேரூராட்சி
## செயல் அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.மு.நாகேஷ்.,

ப.மு. எண் : 50/2020–2021

நாள் : 01.06.2020

பொருள் : கட்டிட அனுமதி – புதுக்கோட்டை மாவட்டம் – அன்னவாசல் முதல்நிலை பேரூராட்சி – புல எண் 330/71 – வார்டு எண் 9 – வயலோக ரோடு – பரப்பளவு 7690.42 சதுர மீட்டர் – அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக் கொள்ள அனுமதித்து ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை :
1. சிவகங்கை நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநரின், செயல்முறை ஆணை ந.க.எண் 4209/2019/சிம–3, நாள் 10.02.2020
2. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம் கடிதம் ந.க.எண் 570/அ2/2017, நாள் 13.03.2020
3. உதவிப் செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம் கடிதம் நாள் 30.01.2020
4. இவ்வலுவலக தீர்மான எண்.458 நாள்.15.05.2020
5. நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம் கடிதம் ந.க.எண் 2141/அ2/2017, நாள் 05.02.2020

*********

**ஆணை :**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் முதல்நிலை பேரூராட்சி வார்டு எண்.9, புல எண் 330/71, 7690.42 சதுர மீட்டர் பரப்பளவில் 192 (G+2) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு மனைப்பிரிவு அங்கீகாரம் மற்றும் கட்டிட வரைபட அனுமதி கோரி பார்வையில் காணும் கடிதங்களின் வாயிலாக அனுமதி கோரப்பட்டதற்கு, கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. புதியதாக கட்டப்படும் கட்டிடத்திற்கு எந்த பக்கம் வீதியிருந்தாலும் அந்த வீதியை ஒட்டி 1.30 மீட்டர் இடைவெளியிட்டு கட்டிம் கட்டப்பட வேண்டும்
2. பொது தெருவில் படிக்கட்டு, சாக்கடை தொட்டி மற்றும் காம்பவுண்டு சுவர் முதலான எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்ய கூடாது.
3. கட்டிடத்தில் வைக்கப்படும் நிலை கதவுகள் 6x3–க்கும் ஜன்னல் 4x3க்கும் அமைக்கப்பட வேண்டும்.
4. புதியதாக கட்டப்படும் கட்டிடத்தின் அருகில் குறைந்த மின் அழுத்த கம்பிகள் இருந்தால் மட்டமாக அளக்கும்போது 1.50 மீட்டர் செங்குத்தாக அளக்கும்போது 4.50 மீட்டரும் மற்றும் அதிக மின் அழுத்த கம்பிகள் இருந்தால் மட்டமாக அளக்கும்பொழுது 4.50 மீட்டரும் இருத்தல் வேண்டும்.
5. காம்பவுண்டு சுவர் 2.50 மீட்டர் உயரத்திற்கு மேல் இருத்தல் வேண்டும்.
6. தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, உள்ளூர் நெடுஞ்சாலை மற்றும் தெருக்களில் கட்டப்படும் கட்டிடம் மற்றும் வனிக வளாகம் கட்டும்போது கட்டிட விதியில் குறிப்பிட்டுள்ள அளவில் இடைவெளிவிட்டும் மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம்விட்டும் கட்டிடம் கட்டப்படவேண்டும்.
7. கட்டிட உரிமம் கொடுக்கப்பட்ட அனுமதி காலம் **01.06.2020** முதல் **31.05.2025** வரை உள்ள தேதியாகும். அதற்கு பிறகு கட்டிடம் கட்ட நேரிட்டால் புதிதாக வரைபட அனுமதி பெறப்பட வேண்டும்.
8. மனையிடத்தில் உள்ள சாலைகள் மற்றும் பொது திரவிய இடங்களை நன்கொடை ஆவணமாக பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

S. [signature]

**EXECUTIVE ENGINEER**
**SLUM CLEARANCE BOARD**
**TRICHY DIVISION.**

## சிறப்பு நிபந்தனைகள்

1) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
2) கட்டிடம் கட்டும் போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
3) OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை திறவிடமாக (பூங்காவாக) மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதில் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளக் கூடாது.
4) உத்தேச கூடுதல் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்
5) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
6) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண் 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
7) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பவருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
8) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு பாதுகாப்பான முறையில் மூடி அமைத்து கொள்ள வேண்டும்.
9) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
10) அரசாணை எண் 341/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 03.11.2004 ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
11) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
12) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
13) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக / STP Design-ற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (குடிநீர் சட்டம்) ன்படி வாரியம் இணக்கம் பெற்று (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
14) தமிழ்நாடு கட்டிட தொழிலாளர் நலவாரியத்திற்கு மதிப்பீட்டு தொகையில் 1% சதவீதம் செலுத்தப்பட்ட விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்,
அன்னவாசல் முதல்நிலை பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

1-6-2020

பெறுநர்
நிர்வாகப் பொறியாளர்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி கோட்டம், மதுரை ரோடு, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி–8.

நகல் : துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்
அலுவலகம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம்,சிவகங்கை.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.